(முற்பகல் 10.00)

2. தகவல் கோரல்

அறிவிக்கை கொடுத்திருந்த தீர்மானங்கள் குறித்து

திரு. மு. அம்பிகாபதி: திருப்பூரில் ஏற்பட்ட அமைதியற்ற நிலைமை பற்றி சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எனக்குத் தெரியும். திரு. அம்பிகாபதியிடம் தெரிவித்திருக்கிறேன். முக்கியத்துவம்வாய்ந்தது என்று நான் அதுபற்றி எடுத்த நடவடிக்கைகள் அவருக்குத் தெரியும். அவர்களே பக்கத்தில் இருந்தார்கள். தெரிந்தும் இப்படிக் கேட்கலாமா?

திரு. சொ. ந. பழனிச்சாமி: நான் 41-வது விதியின்கீழ் 1ஆம் தேதியன்று ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்தேன். அது என்ன ஆயிற்று?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுதான் பாயின்ட் ஆப் ஆர்டரா? என் அறைக்கு வாருங்கள் விவரம் சொல்லுகிறேன்.

3. உரிமைப் பிரச்சனைகள்

(அ) 'அண்ணா', 'தினகரன்', 'மெயில்', 'முரசொலி', 'தென்னகம்', 'மக்கள் குரல்' ஆகிய நாளேடுகள் மீது எழுப்பப்பட்ட பிரச்சனைகள் மீது பேரவைத்தலைவரின் தீர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. துரை முருகன் மற்றும் திரு. தி. சு. நல்லத்தம்பி ஆகியோர் 'அண்ணா' நாளேட்டின் மீதும், திரு. வி. கே. சின்னசாமி அவர்கள் 'தினகரன்' நாளேட்டின் மீதும், திரு. கே. பண்ணை சேதுராம் அவர்கள் 'மெயில்' நாளேட்டின் மீதும், திரு எஸ். ஆர். இராதா அவர்கள் ''முரசொலி'' நாளேட்டின் மீதும், திரு. ரகுமான்கான் ''தென்னகம்'' மற்றும் ''மக்கள் குரல்'' நாளேடுகள் மீதும், அவை உரிமை மீறல் குறித்த பிரச்சனைகளை எழுப்பி உள்ளனர்.

இவற்றில் திரு. கே. பண்ணை சேதுராம் அவர்கள் ''மெயில்' நாளேட்டின்மீது எழுப்பி உள்ளது அவர் 'முனிசிபாலிடித் தலைவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுக்கும்' சட்டமுன்வடிவை ஆதரித்துப் பேசியதாகவும், ஆனால் அப் பத்திரிகை 'பஞ்சாயத்துத் தலைவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுக்கும்' சட்டமுன்வடிவை

அவர் ஆதரித்துப் பேசியதாகப் போட்டிருக்கிறது என்றும் எனவே இது அவை உரிமை மீறியதாகும் என்றும் குறிப்பிட்டார். இது வேண்டுமென்று செய்யப்பட்ட தவறு அல்ல. தவறைத் திருத்தி அப்பத்திரிகை அறிக்கை வெளியிட்டுள்ளதால் இப்பிரச்சனையை இத்துடன் விட்டுவிடலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்ற பிரச்சனைகளில் ஒரு அடிப்படைக் கருத்து இருக்கிறது. பத்திரிக்கைகளில் அரசியல் கட்சிகளை ஆதரித்து அக்கட்சிகளின் கொள்கைகளை விளக்குவதற்கென்றே வெளியிடப்படும் பத்திரிகைகள் இருக்கின்றன. இவை தாம் ஆதரிக்கும் கட்சியின் கொள்கைகளையும் அது சம்பந்தப்பட்ட கருத்துக்களையும் மட்டுமே வெளியிடுகின்றன. செய்திகளுக்குத் தலைப்புக் கொடுக்கும் போதும் தாம் ஆதரிக்கும் கொள்கைளுக்கேற்ப கொடுக்கின்றன. இதனால் பல முறை இந்த அவையில் தங்கள் பேச்சு வெளியிடப்படவில்லை என்றும், தங்கள் பேச்சுக்குத் தலைப்பு கொடுக்கப்பட்டது தவறாக உள்ளது என்றும் உரிமை மீறல் பிரச்சனைகள் பல மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து வந்துள்ளன. பத்திரிகைகளிடம் விளக்கம் கேட்கும்போது "அவையை அவமதிக்கும் எண்ணம் தமக்கு இல்லை என்றும், இடம் இன்மை காரணமாக முழுப்பேச்சுகளும் போடப்படுவதில்லை என்றும், தம் கண்ணோட்டத்திற்கேற்பத் தலைப்புகள் தரப்படுவதாகவும்" விளக்கங்கள் தரப்படுகின்றன.

கட்சிப் பத்திரிகைகளுக்கு ஒரு விதமாகவும் மற்றப் பத்திரிகைகளுக்கு வேறொரு விதமாகவும் உரிமைகள் இல்லை. எல்லாப்பத்திரிகைகளுக்கும் ஒரே விதமான உரிமை தான் உள்ளது. அவை நடவடிக்கைக் குறிப்புகளை வெளியிடுவதில் கூட்டியோ, குறைத்தோ, அல்லது சிதைத்தோ வெளியிடுவது அவை உரிமை மீறிய செயல் என்பது தான் மரபு. இதன்படிப் பார்த்தால் கட்சிச் சார்புடைய பத்திரிகைகள் எல்லாம் நடவடிக்கைக்கு உட்படுகின்றன.

எனவே திட்டவட்டமாக இது குறித்து ஒரு முடிவு எடுத்துக் கொள்ள வேண்டும். அதுவரை பத்திரிகைகள் மீது இங்கு கொண்டு வரப்பட்ட உரிமை மீறல் குறித்து பிரச்சனைகள் எல்லாவற்றையும் மேல் நடவடிக்கைகள் ஏதும் தேவை இல்லை என்று தெரிவித்து அனுமதி மறுக்கப் படுகின்றன.

இப்பிரச்சனை குறித்து தெளிவான ஒரு வழிவகை செய்ய கீழ்க்கண்ட பிரச்சனையை அவை உரிமைக் குழு பரிசீலிக்க வேண்டும் என்பதற்காக அக் குழுவிற்கு நானே அனுப்புகிறேன்.

"பத்திரிகைகளில் பேரவையின் நடவடிக்கைக் குறிப்புகள் எவ்விதம் வெளியிடப்படவேண்டும்? இவற்றில் கட்சிப் பத்திரிகைகளுக்கு விதி விலக்கு அளிக்கப்பட வேண்டுமா? பத்திரிகைகளில் அவை நடவடிக்கை குறிப்புகள் சரியானபடி வெளியிடப்படவில்லையானால், எந்தவித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்".

இந்தப் பிரச்சனையை அவை உரிமைக் குழு ஆய்ந்து அடுத்த கூட்டத் தொடருக்குள் ஒரு அறிக்கை அளிக்க வேண்டும் என்று தெரிவித்து, அக் குழுவிற்கு இப்பிரச்சனையைஅனுப்பி வைக்கிறேன்.

ஆ) மாண்புமிகு சமுகநலத்துறை அமைச்சர்மீது எழுப்பிய உரிமைபிரச்னை மீது பேரவைத் தலைவரின் தீர்ப்பு:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 29-3-1978 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரஸ்வதி அவர்கள் மீது, ஒரு அமைச்சர் அவைக்கு அரசுத் துறை அலுவலர் ஒருவரால் கொடுக்கப்பட்ட கடிதம் ஒன்றினை படித்ததின் மீது ஒரு உரிமை மீறல் பிரச்சினையை எழுப்பியுள்ளார். இது வேண்டுமென்றே, தான் எழுப்பிய குற்றச்சாட்டிற்கு தனக்கு மாசு கற்பிக்கும் வகையிலும், தான் பேரவை உறுப்பினராக இயங்க இயலாத வகையிலும் இவ்வாறு செய்யப்பெற்றது என்று கூறியுள்ளார். இதன் மீது உறுப்பினரது மற்றும் அரசினது கருத்தைக் கேட்டு பேரவைத் தலைவர் தமது தீர்ப்பை பின்னர் அறிவிப்பார் என்றும் துணைத் தலைவர் அவர்கள் அன்று அவையில் அறிவித்துள்ளார்கள்.

இருதரப்பிலும் எடுத்து வைக்கப்பட்ட கருத்துக்களையும்' அமைச்சர் அவர்கள் 81-வது விதியின் கீழ் அவைக்கு அளித்த அறிக்கையையும், உறுப்பினர் அவர்கள் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினையையும் கூர்ந்து ஆராய்ந்தேன்.

உறுப்பினர் திரு. ரகுமான்கான் முதல் நாள் சுற்றறிக்கையை படித்துக் காட்டியபோது அது துறையில் செய்யப்பட்ட தவறு என்று கூறுது, அது சம்பந்தப்பட்ட அமைச்சரின் கவனத்திற்கு உட்பட்டுத் தான் இவ்வாறுன தவறு நடத்திருக்கிறது என்பதையும் திட்டவட்டமாகக் குற்றம் சாட்டியுள்ளார். மேலும், உரிமைப் பிரச்சினை அறிவிப்பிலும் அமைச்சருக்கு இதுபற்றி, 'personal knowledge' உள்ளது போலத்தான் எழுதியும் கொடுத்துள்ளார். மேலும் எதிர்க் கட்சித் துணைத் தலைவர் மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் தெரிவித்தக் கருத்தையும் கூட ஏற்காது அமைச்சர் பொறுப்பில் அத்துறை இருப்பதினுல் அமைச்சர் அதை விசாரிக்க வேண்டுமென்று கூறுது அமைச்சர் மீது தான் அவர் குற்றம் சாட்டுவதாகவும் திட்டவட்டமாகக் கூறியுள்ளார். ஆனுல், அமைச்சருடைய கவனத்தின்கீழ் தான் இவ்வாருக சுற்றறிக்கை அனுப்பப்பட்டு துறையில் தவறு நடந்திருக்கிறது என்பதற்கு ஆதாரமில்லை,